KFA-I-M

# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - எட்டு - ________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: ________ | மாணவன்/மாணவி பெயர்: ________ |
| இடம்: ________ | வரிசை எண்: ________ |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **10 × 1 = 10**

1. அமுதா ______________ எழுதினாள்.
   அ) பாடத்தை ஆ) பாடத்தின் இ) பாடத்துக்கு ஈ) பாடத்தால்
2. ‘கோயிலப்பா’ – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
   அ) கோ + அப்பா ஆ) கோயில் + லப்பா
   இ) கோயில் + அப்பா ஈ) கோ + இல்லப்பா
3. என் நண்பர் பெரும் புலவராக இருந்த போதும் ______________ இன்றி வாழ்ந்தார்.
   அ) சோம்பல் ஆ) அகம்பாவம் இ) வருத்தம் ஈ) வெகுளி
4. கற்றவருக்கு அழகு தருவது ______________
   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
5. அரசரை அவரது ______________ காப்பாற்றும்.
   அ) செங்கோல் ஆ) வெண்கொற்றக்குடை
   இ) குற்றமற்ற ஆட்சி ஈ) படைவலிமை
6. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ______________
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
7. உடனிகழ்ச்சிப் பொருளில் ______________ வேற்றுமை வரும்.
   அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்
8. எட்டாம் வேற்றுமை ______________ வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.
   அ) எழுவாய் ஆ) செயப்படுபொருள் இ) விளி ஈ) பயனிலை
9. முருகன் ______________ உயர்ந்தான்.
   அ) உழைப்பை ஆ) உழைப்பால் இ) உழைப்புக்கு ஈ) உழைப்பு
10. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது ______________
    அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

**II. மனப்பாடப் பாடல்** **1 × 4 = 4**

11. ‘கல்வி அழகே அழகு’ பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** **5 × 2 = 10**

12. அரசன் தண்டிக்கும் முறை யாது?
13. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?
14. திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
15. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?

16. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

17. பகைவர்களிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறை யாது?

IV. **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

18. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?

19. நீதிநெறி விளக்கப்பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

20. அறிவியல் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவன யாவை?

21. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

V. **நெடுவினா.** 1 × 5 = 5

22. காப்பியக் கல்வி குறித்து திரு.வி.க. கூறும் செயல்களைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

VI. **கடிதம் எழுதுக.** 1 × 5 = 5

23. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற நண்பனைப் பாராட்டி கடிதம் வரைக.

VII. **வினாக்களுக்கு ஏற்ப விடையளி.**

24. பொருத்துக. 5 × 1 = 5

| | | |
|---|---|---|
| அ) மூன்றாம் வேற்றுமை | - | பெரியபுராணம் |
| ஆ) நான்காம் வேற்றுமை | - | பத்துப்பாட்டு |
| இ) ஆறாம் வேற்றுமை | - | மண்ணால் குதிரை செய்தான் |
| ஈ) இயற்கை ஓவியம் | - | இராமனுக்குத் தம்பி இலக்குவன் |
| உ) இயற்கை அன்பு | - | பாரியினது தேர். |

25. சொற்றொடரில் அமைத்து எழுதுக. 2 × 1 = 2

அ) அழகு ஆ) அணிகலன்